**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண்.415/2023**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 02–ம் நாள் திங்கள்கிழமை **பி.வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ஆனந்தகுமார் | தொழில் |
| த/பெ | சின்னப்பன் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. 1–ம் பிரதிவாதி என்னுடைய தாயார். அவர் தற்போது படியூர் தெற்கு பாளையத்தில் குடியிருக்கிறார். அவர் குடியிருக்கும் வீடு டார்சு போட்ட வீடு என்றாலும் மேலே ஒரு குடியிருப்பு உள்ளது. மேற்படி வீட்டில் 3–ம் பிரதிவாதி குடியிருக்கிறார் என்று சொன்னால் தற்போது குடியிருக்கிறார். தரை தளத்தில் என்னுடைய தாயார் லட்சுமி குடும்பத்தோட அவரது கணவருடன் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் தற்போது குடியிருக்கிறார். நானும் தரைத்தளத்தில் என்னுடைய அம்மாவுடன் குடியிருக்கிறேன். மேற்படி தரைத்தளத்தில் குடியிருப்பதை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது ஆனால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தெற்குபாளையத்தில் இதைத் தவிர ஒரு ஓட்டு வீடு என்னுடைய அம்மாவுக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். அது என்னுடைய அம்மாவின் சுவாதீனத்தில் உள்ளது. படியூரில் வடக்கு பாளையம் என்ற ஒரு பகுதி உள்ளது என்று சொன்னால் அது குறித்து நான் கேள்விப்பட்டதில்லை.

2. படியூர் கிராமத்தில் இந்திரா நகர் என்ற பகுதி தெற்கு பாளையத்திலிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து மேற்படி இந்திரா நகரில் அமைந்துள்ளது என்றால் சரிதான். முன்பு மேற்படி வீட்டிற்கு பழனி என்பவர் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான். மேற்படி பழனியின் மனைவி பெயர் பாப்பம்மாள். அவர்

1999 ஆம் வருடம் இறந்துவிட்டார். அவரது இறப்பு காரியங்களை மகன் என்ற முறையில் ஏசையன் செய்தார் என்று சொன்னால் அவர் மட்டும் செய்யவில்லை அனைத்து மகன்களும் செய்தார்கள். அனைத்து மக்களும் இறுதிக் காரியங்கள் செய்தார்கள் என்று வழக்குக்காக நான் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பழனியும், பாப்பம்மாளும் இருக்கும்போது தாவா சொத்து ஓட்டு வீடாக இருந்தது என்று சொன்னால் சரிதான். பாப்பம்மாள் இறந்து 16 வது நாள் காரியம் மேற்படி ஓட்டு வீட்டில் நடைபெற்றது என்று சொன்னால் ஓட்டு வீட்டில் பெயரளவில் நடந்தது. 16 வது நாள் காரியத்தின் போது பெண் மக்களுக்கு சீர் சிறப்புகள் செய்வது எங்கள் இனத்தின் வழக்கம் என்று சொன்னால் சமுதாய வழக்கம் தான் ஆனால் என்னுடைய அம்மாவுக்கு எந்த விதமான சீரும் கொடுக்கவில்லை.

3. என்னுடைய தாயாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஓட்டு வீடு அமைந்துள்ள இடம் 6 சென்ட் விஸ்தீரணம் கொண்டது அது பழனி பெயரிலிருந்தது. மேற்படி பழனி பெயரில் இருந்த பட்டா, ஆ பதிவேட்டு விவரங்கள் ஆகியற்வறை நான் பார்த்திருக்கிறேன். மேற்படி பழனி மேற்படி பட்டா மற்றும் அ பதிவேடு விபரங்களை ஏசையன் இடம் கொடுத்து மேற்படி சொத்தை நீயே வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஓட்டு வீட்டை இடித்து விட்டு புதிய வீடு கட்டுவதற்கு படியூர் பஞ்சாயத்தில் உரிய அனுமதியை ஏசையன் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வரைபடத்தையும் அனுமதி கடிதத்தையும் நீதிமன்றத்தில் ஏசியன் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அதை வழக்குக்காக ஏற்படுத்த்தியுள்ளார்கள். மேற்கண்ட ஆவணங்கள் வழக்குக்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்று நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல அவை சட்டபூர்வமான ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டுக்கான மின் இணைப்பு எண். 1635 ஆகும் அதன் எண் 313 என்று சொல்லியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான்.

4. இந்த வழக்கில் வாதி தரப்பில் மின் கட்டண அட்டை மற்றும் ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவை ஏசையன் பெயரில் உள்ளது என்றால் குடும்பத்தில் யாரோ ஒருவர் பெயரில் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் பெயரில் உள்ளது. மேற்படி சொத்து ஏசையன் அவர் பெயரில் மின்கட்டணம் ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி அல்ல. மேற்படி வீட்டுக்கு குடிநீர் இணைப்பு உள்ளது. மேற்படி குடிநீர் இணைப்பு ஏசையன் பெயரில் உள்ளது என்று சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை. தாவா சொத்தில் ஏசையன் தான் குடியிருந்து

அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நானோ என்னுடைய சகோதரிகளே என்னுடைய தாயாரோ தாவா சொத்தில் எப்போதும் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது காவல் நிலையத்தில் மேற்படி வீட்டில் யாரும் அனுபவத்தில் இருக்க வேண்டாம் என்று சொன்னதால் என்னுடைய தாயார் தெற்கு பாளையத்தில் இருக்கும் மற்றொரு வீட்டில் குடியிருக்கிறார்கள். மேற்படி வீட்டில் இருக்கும் கண்ணாடி மற்றும் சுவர் ஆகியவற்றை நான்தான் உடைத்தேன் என்று சொன்னால் சரிதான் அவர் எங்களை வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னதால் உடைத்தேன்.

5. வாதி என் மீது புகார் கொடுத்து அதன் மீது வழக்கு பதிவு செய்து காங்கேயம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான் அவர் மீதும் நான் புகார் கொடுத்துள்ளேன். மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் வாதியின் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவி வடவள்ளி கல்வீரம்பாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 15 ஆண்டுகளாக அவர் தன்னுடைய தகப்பனார் வீட்டில் குடியிருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஒரு மகன் மற்றும் மகள் இருக்கிறார்கள் என்னுடைய மகள் கல்லூரியில் படிக்கிறார் மகன் பள்ளி படிப்பு படிக்கிறான். அவர்கள் இருவரும் வடவள்ளி படிக்கிறார்கள் என்றால் சரிதான். 3–ம் பிரதிவாதி கருமத்தம்பட்டியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியில் இருக்கிறார் என்றால் சரிதான். அவர்தான் மேல் மாடியில் குடியிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் நானோ மற்ற பிரதிவாதிகளோ அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்றாலும் வாதியின் அனுபவத்தை நாங்கள் இடையூறுசெய்தால் வாதி இந்த வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் மனைவி வருமானவரித் துறையில் பணியாளராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

6. வாதி ஈரோடு நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அதற்காக அவர் ஈரோட்டில் தனியாக ஒரு வீடு வாங்கி வேலை நாட்களில் மட்டும் அங்கு சென்று தங்கி இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல அவர் முழுமையாக ஈரோட்டில் தான் குடியிருக்கிறார். விடுமுறை நாட்களில் அவர் தாவா சொத்தில் வந்து தங்கி செல்கிறார் என்றாலும் நான் வழக்குக்காக மேற்படி சங்கதியை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. தாவா சொத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் அனுபவ சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் அது குறித்து எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல வாதிக் கோரியவாறு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.02 21:12:29 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.